RNI-N0: TNTAM/2021/83936
Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 289 | அக்டோபர்.20 2025 திங்கள்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5



## பாகிஸ்தானும் ஆப்கானிஸ்தானும் போர்நிறுத்தத்துக்கு ஒப்புக்கொண்டன: கத்தார் அறிவிப்பு

தோஹா, அக்.20-

பாகிஸ்தானும் ஆப்கானிஸ்தானும் உடனடி போர்நிறுத்தத்துக்கு ஒப்புக்கொண்டதாக கத்தார் வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

பாகிஸ்தானுக்கும், ஆப்கானிஸ்தானுக்கும் இடையே ஒரு வாரத்துக்கும் மேலாக நடந்த சண்டையில் பலர் உயிரிழந்தனர், நூற்றுக்கணக்கானோர் காயமடைந்தனர். இதனையடுத்து ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தானின் பிரதிநிதிகள் தோஹாவில் தங்களுக்கு இடையேயான மோதலை தீர்க்க பேச்சுவார்த்தை நடத்தினர். இந்த பேச்சுவார்த்தையில் கத்தார் மற்றும் துருக்கி நாடுகள் மத்தியஸ்தர்களாக செயல்பட்டனர்.

இதனை தொடர்ந்து, ‘பேச்சுவார்த்தையின் போது, இரு தரப்பினரும் உடனடி போர்நிறுத்தத்துக்கும், இரு நாடுகளுக்கும் இடையே நீடித்த அமைதி மற்றும் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்தும் வழிமுறைகளை நிறுவுவதற்கும் ஒப்புக்கொண்டனர்’ என்று கத்தார் தெரிவித்துள்ளது.

ஆப்கானிஸ்தானில் இருந்து வெளிப்படும் எல்லை தாண்டிய பயங்கரவாதத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கும், எல்லையில் அமைதி மற்றும் நிலைத்தன்மையை மீட்டெடுப்பதற்கும் உடனடி நடவடிக்கைகள் குறித்து கவனம் செலுத்தும் என்று பாகிஸ்தான் தெரிவித்தது. அதேநேரத்தில், எல்லைப் பகுதிகளில் தாக்குதல்களை நடத்தும் போராளிகளுக்கு அடைக்கலம் கொடுப்பதாக கூறப்படும் குற்றச்சாட்டை ஆப்கானிஸ்தான் மறுத்துள்ளது. பாகிஸ்தான் ஆப்கானிஸ்தான் இடையேயான 48 மணி நேர போர் நிறுத்தம் வெள்ளிக்கிமை மாலையுடன் காலாவதியானது. இதன் அடுத்த சில மணி நேரங்களுக்குப் பிறகு, பாகிஸ்தான் எல்லையைத் தாண்டி தாக்குதல் நடத்தியது.

ஆப்கானிஸ்தானின் கிழக்கு பாக்டிகா மாகாணத்தில் இரண்டு மாவட்டங்களில் தாக்குதல்கள் நடந்ததாக பாகிஸ்தான் பாதுகாப்பு அதிகாரிகள் உறுதிப்படுத்தினர். பாகிஸ்தான் விமானப்படை நடத்திய தாக்குதலில் ஆயுதமேந்திய போராளிகள் மட்டுமே கொல்லப்பட்டனர் என்றும், பொதுமக்கள் யாரும் உயிரிழக்கவில்லை என்றும் அவர்கள் கூறினர்.

ஆனால் வான்வழித் தாக்குதல்களில் பெண்கள், குழந்தைகள் மற்றும் உள்ளூர் கிரிக்கெட் வீரர்கள் உட்பட பலர் கொல்லப்பட்டதாக ஆப்கானிஸ்தான் அதிகாரிகள் தெரிவித்தனர். பாக்டிகாவில் ஆப்கானிஸ்தான் வீரர்கள் கொல்லப்பட்டதை அடுத்து, பாகிஸ்தான் பங்கேற்கும் முத்தரப்பு தொடரில் இருந்து ஆப்கானிஸ்தான் விலகியது

## கோயில்கள், மடங்களின் நிதி, சொத்துகள் தொடர்பான அறநிலையத் துறை உத்தரவு, அரசாணைகளை இணையத்தில் உடனுக்குடன் வெளியிட வழக்கு



சென்னை, அக்.20–

கோயில்கள், மடங்களின் நிதி, சொத்துகள் தொடர்பான அரசாணைகள், டெண்டர் அறிவிக்கைகள், அனுமதி உத்தரவுகள் ஆகியவற்றை அறநிலையத் துறை இணையதளத்தில் உடனுக்குடன் பதிவேற்றம் செய்யக்கோரி உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது. இது குறித்து தமிழக அரசு, அறநிலையத் துறை பதில் அளிக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதுதொடர்பாக ஆலய வழிபடுவோர் சங்கத் தலைவர் மயிலாப்பூர் டி.ஆர். ரமேஷ், தாக்கல் செய்த மனு: தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் படி அரசுத் துறைகளின் அரசாணைகள், டெண்டர் அறிவிக்கைகள், அனுமதி உத்தரவுகளை அனைவரும் தெரிந்து கொள்ளும் வகையில் அரசு இணையதளங்களில் வெளிப்படையாக கட்டாயம் பதிவேற்றம் செய்ய வேண்டும். ஆனால், இந்து சமய அறநிலையத் துறையின் இணையதளத்தில் கடந்த 2022ம் ஆண்டுக்குப் பிறகு எந்தவொரு தகவலும் புதிதாக பதிவேற்றம் செய்யப் படவில்லை.

அறநிலையத் துறை நிர்வாகத்தின் அன்றாட செயல்பாடுகள், துறை ஆணையர் வசம் உள்ள பொதுநல நிதி குறித்து எந்த தகவலும் வெளிப் படையாக தெரிவிப்பதில்லை. எனவே, கோயில்கள், மடங்கள், இந்து மத கட்டளைகளின் நிதி, சொத்துகள் தொடர்பான அறநிலையத் துறையின் அர சாணைகள், டெண்டர் அறிவிக்கைகள், அனுமதிக் கான உத்தரவுகளை பொது வெளியில் அனைவரும் உடனே அறிந்து கொள்ளும் வகையில், அறநிலையத் துறையின் இணையதளத்தில் கட்டாயம் பதிவேற்றம் செய்யுமாறு உத்தரவிட வேண்டும். அதுவரை, டெண்டர் உள்ளிட்ட எந்த பணிகளையும் இறுதி செய்ய தடை விதிக்க வேண்டும். இவ்வாறு கோரியிருந்தார்.நீதிபதி வி.லட்சுமி நாராயணன் முன்பு இந்த மனு மீதான விசாரணை நடந்தது. மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் பி.ஜெகந்நாதன், அறநிலையத் துறை தரப்பில் வழக்கறிஞர் எஸ்.ரவிச்சந்திரன், மாநில தகவல் ஆணையம் தரப்பில் வழக்கறிஞர் விக்னேஸ்வரன் ஆஜராகி வாதிட்டனர்.

வழக்கை விசாரித்த நீதிபதி இதுதொடர்பாக தமிழக அரசும் அறநிலையத் துறையும் பதில் அளிக்க உத்தரவிட்டு, விசாரணையை அக்.29க்கு தள்ளிவைத்தார்.

## ஏழுமலையான் பக்தர்களிடம் இடைத்தரகர் ரூ.4 லட்சம் மோசடி

திருமலை, அக்.20–

தெலங்கானாவை சேர்ந்த சில பக்தர்கள் தங்களுக்கு திருப்பதி எழுமலையான் கோயில் ஆர்ஜித சேவைகளும், திருமலையில் தங்க சொகுசு பங்களாவும் ஏற்பாடு செய்து தர வேண்டும் என இடைத்தரகர் ஒருவரை அணுகியுள்ளனர். அவர், இதற்கு ரூ.4 லட்சம் செலவாகும் என கூறியுள்ளார். இதையடுத்து மொத்த தொகையையும் தெலங்கானா பக்தர்கள் செல்போன் மூலம் அனுப்பி உள்ளனர். ஆனால் பணத்தை பெற்றுக் கொண்ட பிறகு அந்த இடைத்தரகர் தனது செல்போனை ஸ்விட்ச் ஆஃப் செய்து விட்டார். இதையடுத்து தாங்கள் ஏமாற்றப்பட்டதை உணர்ந்த அந்த பக்தர்கள் திருமலை 2வது காவல் நிலையத்தில் நேற்று புகார் அளித்தனர்.

இதன் மீது வழக்குப் பதிவு செய்த போலீஸார், தலைமறைவான இடைத்தரகரை தேடி வருகின்றனர். இது போன்ற இடைத்தரகர்களை நம்பி ஏமாற வேண்டாம் என பக்தர்களுக்கு திருமலை போலீஸார் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# “என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி” பயிற்சிக் கூட்டம்

## முதல்வர் தலைமையில் 28ம் தேதி நடக்கிறது



சென்னை, அக்.20–

மாமல்லபுரத்தில், தேர்தலை முன்னிட்டு திமுக நிர்வாகிகளுக்கு ‘ என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி’ என்ற பயிற்சிக் கூட்டம் வரும் அக்.28ம் தேதி முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெறுகிறது. இதுகுறித்து பொதுச்செயலாளர் துரைமுருகன் வெளியிட்ட அறிவிப்பில் கூறியிருப்பதாவது: திமுக தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் திட்டமிடலின்படி வரும் சட்டப்பேரவைத் தேர்தலை எதிர்கொள்ளும் வகையில் பல்வேறு முன்னெடுப்புகளை திமுக மேற்கொண்டு வருகிறது. அந்த வகையில் மத்திய பாஜக அரசின் முன்பு “தமிழ்நாடு தலைகுனியாது” என்ற பரப்புரையை கழகம் தொடங்கவுள்ளது. அதன் ஒருபகுதியாக ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் திமுகவின் வெற்றியை உறுதி செய்யும் வகையில், முதல்வர் ஸ்டாலின் தலைமையில் “என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி” என்ற முன்னெடுப்புக்காக ”திமுக மாவட்ட செயலாளர்கள் மாநிலங்களவை மற்றும் மக்களவை உறுப்பினர்கள் சட்டப்பேரவை உறுப்பினர்கள், தொகுதி பார்வையாளர்கள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர்க் கழக செயலாளர்களுக்கான பயிற்சிக் கூட்டம்” வரும் அக்.28ம் தேதி செவ்வாய்கிழமை, காலை 9 மணிக்கு மாமல்லபுரம், ஈ.சி.ஆர்.சாலையில் உள்ள “கான்ஃப்ளுயன்ஸ் ஹாலில்” நடைபெறும்.

இக்கூட்டத்தில் மாவட்ட செயலாளர்கள், மாநிலங்களவை, மக்களவை உறுப்பினர்கள், எம்எல்ஏக்கள், தொகுதி பார்வையாளர்கள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர்க் கழகச் செயலாளர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ள வேண்டும். இவ்வாறு அவர் அறிவித்துள்ளார்.

## கரூர் மண்டலத்தில் புதிய 5 தாழ்தள நகரப் பேருந்துகள் சேவை: செந்தில்பாலாஜி தொடங்கி வைத்தார்



கரூர், அக்.20-

புதிய 5 தாழ்தள நகரப் பேருந்துகள் சேவையை முன்னாள் அமைச்சர் வி.செந்தில்பாலாஜி எம்எல்ஏ தொடங்கி வைத்தார்.

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக கரூர் மண்டலம் சார்பில் புதிய 5 தாழ்தள நகரப் பேருந்துகள் சேவை தொடக்க விழா இன்று (அக்.19ம் தேதி) கரூர் திருமாநிலையூர் புதிய பேருந்து நிலையத்தில் நேற்று நடைபெற்றது.

ஆட்சியர் மீ.தங்கவேல் தலைமை வகித்தார். முன்னாள் அமைச்சர் வி.செந்தில்பாலாஜி கொடியசைத்து பேருந்துகள் சேவை தொடங்கி வைத்தார். கரூர் மாநகராட்சி துணை மேயர் ப.சரவணன், மாநகராட்சி மண்டல குழு தலைவர்கள் எஸ்.பி.கனகராஜ், ஆர்எஸ். ராஜா, சக்திவேல், மாநகராட்சி ஆணையர் கே.எம்.சுதா, தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக கரூர் மண்டல துணை மேலாளர் சாமிநாதன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

இவற்றில் கரூர் குளித்தலை, கரூர் பாளையம் வழித்தடங்களில் தலா 2 பேருந்துகள், கரூர் வேலூர் வழித்தடத்தில் 1 பேருந்தும் இயக்கப்படுகிறது. செய்தியாளர்களிடம் செந்தில்பாலாஜி கூறியது: இந்த புதிய பேருந்துகள் மாற்றுத் திறனாளிகள் எளிதில் பயணிக்கக்கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டிருக்கின்றன.

புதிய பேருந்து நிலையம் பயன்பாட்டிற்கு வந்தபின் எந்த இடங்களிலும் போக்குவரத்து நெரிசல் இல்லை. கரூர் மக்கள் வியந்து பார்க்கக்கூடிய அளவுக்கு மிக பிரம்மாண்டமாக, எல்லா வசதிகளும் கூடிய சிறப்பம்ச ங்களுடன் புதிய பேருந்து நிலையம் வடிவமைக்கப்பட் டுள்ளது இன்னும் கூடுதல் தேவைகள் இருந்தாலும் அதை செய்வதற்கு முதல்வர் தயாராக இருக்கின்றார்கள்.

புதிய பேருந்து நிலையத்தில் இருந்து பழைய பேருந்து நிலையத்திலிருந்து 24 மணி நேர நகரப் பேருந்துக்கள் சேவை உள்ளன. சேலம், ஈரோடு, கோவை, தாராபுரம், பொள்ளாச்சி செல்லக்கூடிய பேருந்துகள் புதிய பேருந்து நிலையத்திலிருந்து புறப்பட்டு கரூர் பழைய பேருந்து நிலையத்துக்கு சென்று அங்கிருந்து செல்லக்கூடிய இடங்களுக்கு செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

முதல்வர் திட்டங்களை அறிவித்து, அதற்கான நிதிகளைக் கொடுத்து, நாம் செயல்படுத்த நினைக்கின்ற பொழுது சிலர் மக்கள் மீதுஅக்கறை இல்லாதவர்கள், மக்களுக்கு எதிராகச் செயல்படக் கூடியவர்கள், மக்களுக்கு எந்த நன்மையும் கரூர் மாவட்டத்தில் கிடைத்து விடக்கூடாது என்று குறுகிய மனப்பான்மையோடு இருக்கக்கூடியவர்கள், அவர்கள் ஆட்சிப் பொறுப்பில் இருந்த பொழுதும் மக்களுக்கு எதையும் செய்யாதவர்கள், இப்பொழுது இந்தத்திட்டங்கள் நடந்துவிடக்கூடாது என்பதற்காக தொடர்ந்து ஒவ்வொரு திட்டங்களையும் நீதிமன்றத்திற்குச் சென்று தடையாணை பெறுகின்றனர். அதன்பின் போராடி வெற்றிபெற்றுதான் திட்டங்கள் கொண்டு வரப்படுகிறது.

திருவள்ளுவர் மைதானத்தில் ரூ.7 கோடியில் மாவட்ட மைய நூலகம் கட்டவும் தடையாணை பெற்றன்ர. அதன் பின் நீதிமன்றம் சென்று வெற்றி பெற்று கட்டப் படுகிறது. இப்படி ஒவ்வொரு பணிகளாக கரூரில் முன்னெடுக்கக்கூடிய பணிகள் அனைத்துமே நீதிமன்றம் சென்று வெற்றிபெற்று பணிகளைத் தொடங்கக்கூடிய சூழல் இருக்கின்றன. வரக்கூடிய ஆண்டுகளில் பொதுமக்களுக்கு இன்னும் சிறப்புத் திட்டங்கள் சிறப்பாக நடைபெற இருக்கின்றன என்றார்.

# சபரிமலையில் அலைமோதிய பக்தர்கள் கூட்டம்



சபரிமலை, அக்.20-

சபரிமலை ஐயப்பன் கோயிலில் மாதாந்திர பூஜைக்காக நேற்று முன்தினம் மாலை நடை திறக்கப்பட்டது. பக்தர்கள் கூட்டம் வழக்கத்தை விட அதிகமாக இருந்தது.

வரும் 22ம் தேதி குடியரசு தலைவர் திரவுபதி முர்மு சபரிமலையில் ஐயப்பனை தரிசிக்க வருகிறார். இதனால் 21, 22ம் தேதி பக்தர்களுக்கான அனுமதி ரத்து செய்யப்பட்டுள்ளது. 5 நாட்கள் வழிபாடு 3 நாளாக குறைந்ததால் பக்தர்களின் வருகை தற்போது அதிகரித்துள்ளது.

மேலும் தீபாவளிக்கு முன்னதாக தரிசனத்தை முடித்து பண்டிகைக்கு வீடு திரும்புவதிலும் பலர் ஆர்வம் காட்டி வருகின்றனர். இதனால் நேற்று சபரிமலையில் பக்தர்களின் வருகை வழக்கத்தை விட அதிகமாக இருந்தது. நிலக்கல், பம்பை, நடைப்பந்தல் உள்ளிட்ட பல பகுதிகளிலும் கூட்டம் அலைமோதியது. மேலும் மழையும் பெய்து கொண்டே இருந்ததால் பக்தர்களுக்கு பெரும் சிரமம் ஏற்பட்டது.

பொதுவாக மாதாந்திர வழிபாட்டு காலங்களில் பக்தர்களின் வருகை இந்தளவுக்கு இருக்காது. ஆனால் இம்முறை கூட்டம் வெகுவாக அதிகரித்துள்ளது.

இதுகுறித்து ஐயப்ப பக்தர்கள் கூறுகையில், சபரிமலையில் அடிப்படை வசதிகள் சரிவர செய்யப்படாததால் சிக்கல் ஏற்பட்டது. பக்தர்களின் வருகையை முறைப்படுத்தி உரிய வசதிகளை செய்து தர வேண்டும் என்றனர்.



# ராஜபாளையத்தில் கனமழை: அரிசி ஆலை சுவர் இடிந்து 50+ ஆடுகள் உயிரிழப்பு

ராஜபாளையம், அக்.20-

ராஜபாளையம் பகுதியில் இன்று அதிகாலை பெய்த கனமழையில் தனியார் அரிசி ஆலை சுற்றுச்சுவர் இடிந்து விழுந்ததில் தொழுவத்தில் அடைத்து வைத்திருந்த 50க்கும் மேற்பட்ட ஆடுகள் இடிபாடுகளில் சிக்கி உயிரிழந்தன.

ராஜபாளையம் அருகே இளந்திரைகொண்டான் ஊராட்சிக்கு உட்பட்ட அம்மையப்பபுரம் கிராமத்தைச் சேர்ந்தவர் முருகன். ஆடு மேய்க்கும் தொழில் செய்து வருகிறார். முருகன் அதே பகுதியில் தொழுவம் அமைத்து 100க்கும் மேற்பட்ட ஆடுகள் வளர்த்து வருகிறார். வெள்ளிக்கிழமை மாலை மேய்ச்சல் முடிந்து ஆடுகளை தொழுவத்தில் அடைத்து விட்டு வீட்டுக்குச் சென்றார்.

ராஜபாளையம் பகுதியில் நேற்று இரவு பெய்த கனமழை காரணமாக அதிகாலை 3 மணி அளவில் தொழுவத்தின் அருகே உள்ள தனியார் அரிசி ஆலையின் 25 அடி உயரமுள்ள சுற்றுச் சுவர் இடிந்து தொழுவத்தின் மீது விழுந்தது. இதில் இடிபாடுகளில் சிக்கி 50க்கும் மேற்பட்ட ஆடுகள் இறந்தன. இதுகுறித்து தளவாய்புரம் போலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். சம்பவ இடத்தில் டி.எஸ்.பி பஸினா பீவி, வட்டா ட்சியர் ராஜீவ் காந்தி ஆகியோர் ஆய்வு செய்தனர். தனியார் அரிசி ஆலையை சுற்றிலும் தரையில் இருந்து 10 அடி உயரத்திற்கு மண் நிரப்பி, அதன்மேல் 15 அடி உயரத்துக்கு சுற்றுச் சுவர் எழுப்பியதால் மண் சரிந்து சுற்றுச்சுவர் இடிந்து விழுந்துள்ளது. இதனால் அரிசி ஆலையை சுற்றிலும் கட்டப்பட்டுள்ள சுற்றுச்சுவரை இடிக்க வருவாய்த் துறையினர் உத்தரவிட்டனர்.

# கோவை ஜி.டி.நாயுடு மேம்பாலத்தில் 'ஏஐ' தொழில்நுட்பத்தில் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்த நடவடிக்கை

**கோவை, அக்.20–**

கோவை அவிநாசி சாலையில் நிலவும் போக்குவரத்து நெரிசலை தவிர்க்கும் வகையில் மாநில நெடுஞ்சாலைத் துறை சார்பில் உப்பிலிபாளையம் முதல் கோல்டுவின்ஸ் வரை 10.10 கிலோ மீட்டர் தூரத்துக்கு கட்டப்பட்ட மேம்பாலம், கடந்த 9ம் தேதி மக்கள் பயன்பாட்டுக்கு தொடங்கப்பட்டது. இந்த மேம்பாலத்தில் 60 கிலோ மீட்டர் வேகத்தில் மட்டுமே வாகனங்கள் செல்ல வேண்டும், மேம்பாலத்தின் இறங்குதளத்தில் 30 கிலோ மீட்டர் வேகத்தில் மட்டுமே செல்ல வேண்டுமென போலீஸார் அறிவுறுத்தி உள்ளனர். இதுதொடர்பான எச்சரிக்கை அறிவிப்புப் பலகைகளும் அங்கு வைக்கப்பட்டுள்ளன. இதையும் மீறி வாகன ஓட்டிகள் வேகமாக சென்று வருகின்றனர். கடந்த வாரம் மேம்பாலத்தில் இருந்து அதிவேகமாக வந்த கார், கீழே இறங்கும்போது கட்டுப்பாட்டை இழந்து சாலையோரம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லாரி மீது மோதியதில், 3 பேர் உயிரிழந்தனர். இதைத் தொடர்ந்து மேம்பாலத்தில்



40 இடங்களில் நவீன கண்காணிப்புக் கேமராக்கள் பொருத்த போலீஸார் திட்டமிட்டுள்ளதாக தெரிவித்தனர். இதுதொடர்பாக சமூக செயல்பாட்டாளரான கோவை சிட்டிசன்ஸ் வாய்ஸ் கிளப் தலைவர் சி.எம். ஜெயராமன் கூறும்போது, ''ஜி.டி.நாயுடு மேம்பாலத்தின் உப்பிலிபாளையம் கோல்டுவின்ஸ் ஆகிய இருபுற இடங்களிலும் போலீஸார் பேட்ரல் வாகனத்தை நிறுத்தி கண்காணிக்க வேண்டும். இறங்குதளங்கள், ஏறுதளங்கள் குறித்த அறிவிப்புப் பலகைகளை 100 மீட்டருக்கு முன்னரே வாகன ஓட்டிகளுக்கு தெரியுமாறு வைக்க வேண்டும். சட்டத்துக்கு உட்பட்டு அங்கு எந்த வகையான வேகத் தடைகளை அமைக்க முடியுமோ, அவற்றை குறிப்பிட்ட தூரத்துக்கு அமைக்க வேண்டும். அதேபோல், விபத்தில் சிக்கியவர்களை உடனடியாக மீட்க மேம்பாலத்தின் இருபுறங்களிலும் ஆம்புலன்ஸ் வாகனத்தை எப்போதும் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும்'' என்றார்.

கோவை மாவட்ட ஆட்சியர் பவன்குமார் கிரியப்பனவர் கூறும்போது, ''அவிநாசி சாலை ஜி.டி.நாயுடு மேம்பாலத்தில் இறங்குதளங்களில் ரப்பர் வேகத்தடைகள் அமைக்கப்பட்டுள்ளன. போக்குவரத்து நெரிசலை தவிர்க்க, உப்பிலிபாளையம் ரவுண்டானா அருகே சிக்னல்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேம்பாலத்தின் மீது பல்வேறு இடங்களில் 'ஏஐ' தொழில்நுட்ப வசதியுடன் கூடிய சிசிடிவி கேமராக்கள் பொருத்தப்பட உள்ளன. இதன் மூலம் அதிவேக வாகன ஓட்டிகள், விதிமீறல் வாகன ஓட்டிகள் கண்டறியப்பட்டு, அவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும். மேம்பாலத்தில் வாகனங்கள் இறங்கும், ஏறும் இடங்களில் அறிவிப்புப் பலகைகளை, குறிப்பிட்ட தூரத்துக்கு முன்னரே பொருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது'' என்றார்.

# உலக சந்தையை புரட்டி போடும் 2 என்எம் சிப்: மத்திய அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் கருத்து

புதுடெல்லி, அக்.20-

இந்தியாவின் 2 என்எம் சிப் உலக சந்தையை புரட்டிப் போடும் என்று மத்திய தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.



டெல்லியில் நேற்று நடைபெற்ற தனியார் தொலைக்காட்சி நிகழ்ச்சியில் அவர் கூறியதாவது: தரவுகள் (டேட்டா) என்பது தற்போது கச்சா எண்ணெய்க்கு இணையாகவும் தரவு மையங்கள் (டேட்டா சென்டர்கள்) என்பது எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைகளாகவும் கருதப்படுகின்றன. தற்போது டேட்டா மற்றும் டேட்டா சென்டர்களே ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியை தீர்மானிக்கின்றன. இந்தத் துறையில் இந்தியா முன்வரிசையை எட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

குறிப்பாக உள்நாட்டு செமி கண்டக்டர் உற்பத்திக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு வருகிறது. ஒரு காலத்தில் 7 நானோ மீட்டர், 5 நானோ மீட்டர் செமி கண்டக்டர்கள் ஆதிக்கம் செலுத்தி வந்தன. தற்போது 2 நானோ மீட்டர் (என்எம்) செமி கண்டக்டர்கள் உற்பத்தியில் உலக நாடுகள் கவனம் செலுத்தி வருகின்றன.

இந்தியாவில் 2 என்எம் சிப் வடிவமைக்கப்பட்டு வருகிறது. இந்த சிப் உலக சந்தையை புரட்டிப் போடும். உலகத்தின் ஒட்டு மொத்த சிப் வடிவமைப்பாளர்களில் 20 சதவீதம் பேர் இந்தியர்கள். எனவே இந்தத் துறையில் இந்தியா சாதனை படைக்கும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

கடந்த 2023ம் ஆண்டில் இந்திய செமி கண்டக்டர் துறையின் சந்தை மதிப்பு ரூ.3.17 லட்சம் கோடியாக இருந்தது. கடந்த 2024ம் ஆண்டில் ரூ.3.75 லட்சம் கோடியாகவும் நடப்பாண்டில் ரூ.4.17 லட்சம் கோடியாகவும் அதிகரித்து உள்ளது.

# யுஜிசி 'நெட்' தேர்வு தேதி அறிவிப்பு

**புதுடெல்லி, அக்.20–**

யுஜிசி நெட் தேர்வு, டிச.31 முதல் ஜனவரி 7ம் தேதி வரை கணினிவழியில் நடைபெறுகிறது. உதவிப் பேராசிரியர் பணிக்கு தகுதித் தேர்வான யுஜிசி நெட் தேர்வு ஆண்டுக்கு 2 தடவை (ஜூன் மற்றும் டிசம்பர்) நடத்தப்படுகிறது.இத்தேர்வை யுஜிசி சார்பில் தேசிய தேர்வு முகமை நடத்துகிறது. அதன்படி, நெட் தேர்வு டிசம்பர் 31 முதல் ஜனவரி 7ம் தேதி வரை நடைபெறுகிறது. தேர்வு மைய விவரம் தேர்வுக்கு 10 நாட்களுக்கு முன்பாக தெரிவிக்கப்படும் என்று என்டிஏ இயக்குநர் (தேர்வுகள்) பி.விஜயகுமார் அறிவித்துள்ளார்.



# மொசாம்பிக்கில் படகு கவிழ்ந்த விபத்தில் 3 இந்தியர் உயிரிழப்பு

மொசாம்பிக் நாட்டில் படகு கவிழ்ந்து 3 இந்தியர்கள் உயிரிழந்துள்ளனர்.

கிழக்கு ஆப்பிரிக்க நாடுகளுள் ஒன்று மொசாம்பிக். இங்கு ஏராளமான இந்தியர்கள் வசித்து வருகின்றனர். இந்நிலையில் மொசாம்பிக் நாட்டின் மத்திய பகுதியிலுள்ள பெய்ரா துறைமுகத்திலிருந்து நேற்று முன்தினம் காலை ஒரு படகு புறப்பட்டது.

துறைமுகப் பகுதியில் நிறுத்தப்பட்டிருந்த கப்பலுக்கு ஆட்களை ஏற்றிச் செல்ல அந்த படகு சென்றது. செல்லும் வழியில் அந்தப் படகு கடலில் திடீரென கவிழ்ந்தது. இதில் இருந்த 9 பேரும் மூழ்கினர். இந்த விபத்தில் 3 இந்தியர்கள் உயிரிழந்தனர்.

கடலில் விழுந்த 6 பேர் மீட்கப்பட்டனர். இதில் ஒருவர் சிகிச்சை பெற்று வருகிறார். மொசாம்பிக்கில் உள்ள இந்தியத் தூதரகம் இந்தத் தகவலை உறுதி செய்துள்ளது.

# பி.சி.க்கு 42 சதவீத இடஒதுக்கீடு கேட்டு தெலங்கானாவில் பந்த்

ஹைதராபாத், அக்.22-

பிற்படுத்தப்பட்டோருக்கு 42 சதவீத இட ஒதுக்கீட்டை வலியுறுத்தி தெலங்கானாவில் ஆளும் காங்கிரஸ், பாஜக,



பிஆர்எஸ், கம்யூனிஸ்ட் கட்சிகள் மற்றும் அனைத்து இயக்கங்கள் சார்பில் நேற்று பந்த் நடத்தப்பட்டது.

இதனால் அரசு, தனியார் பேருந்துகள் இயக்கப்பட வில்லை. இதன் காரணமாக தீபாவளி பண்டிகை மற்றும் வார இறுதியை கொண்டாட வெளியூர் மற்றும் வெளி மாநிலங்களுக்கு செல்லவிருந்த ஆயிரக்கணக்கான பொதுமக்கள் போராட்டத்தை

அறியாமல் பேருந்து நிலையங்களில் காத்து கிடந்தனர்.

# பிஹார் தேர்தல்: அக்.24ல் பிரச்சாரத்தை தொடங்குகிறார் பிரதமர் மோடி

பாட்னா, அக்.20-

மொத்தம் 243 உறுப்பினர்களைக் கொண்ட பிஹார் சட்டப்பேரவைக்கு நவம்பர் 6, 11 ஆகிய தேதிகளில் 2 கட்டங்களாக தேர்தல் நடைபெற உள்ளது. இதனையொட்டி பிரதமர் மோடி அக்.24ல் பிரச்சாரத்தை தொடங்குகிறார். இது குறித்து பாட்னாவில் இன்று (ஞாயிறு) செய்தியாளர்களை சந்தித்த பாஜக மாநிலத் தலைவர் திலீப் ஜெய்ஸ்வால், "பிஹார் சட்டப்பேரவைத் தேர்தலை ஒட்டி பிரதமர் நரேந்திர மோடி அடுத்த வாரம் பிரச்சாரத்தை தொடங்குகிறார். இந்த மாத இறுதிக்குள் 4 பிரச்சாரப் பேரணிகளுக்கு திட்டமிடப்பட்டுள்ளது. முதலில் வரும் 24ம் தேதி சமஸ்திபுராவில் பிரச்சாரம் செய்கிறார். அன்றைய



தினமே, பெகுசராயில் பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்கிறார்." என்றார்.

பிஹார் தேர்தலில் பாஜக மற்றும் ஜேடியு கட்சிகள் இரண்டும் தலா 101 இடங்களில் போட்டியிடுகின்றன. மத்திய அமைச்சர் சிராக் பாஸ்வான் தலைமையிலான லோக் ஜனசக்தி கட்சி (ராம் விலாஸ்) 29 இடங்களில் போட்டியிடுகிறது. உபேந்திர குஷ்வாஹா தலைமையிலான ராஷ்ட்ரிய லோக் மோர்ச்சா (ஆர்எல்எம்) மற்றும் மத்திய அமைச்சர் ஜிதன் ராம் மஞ்சி தலைமையிலான இந்துஸ்தானி அவாம் மோர்ச்சா (மதச்சார்பற்ற) ஆகிய கட்சிகளுக்கு தலா ஆறு இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

# தமிழக நிதியமைச்சர் கேட்ட 10 வினாக்களுக்கு பதிலளித்ததுடன் முதல்வருக்கு அண்ணாமலை 6 கேள்விகள்

சென்னை, அக்.20-

மத்திய அரசுக்கு தமிழக நிதியமைச்சர் தங்கம் தென்னரசு கேட்ட 10 வினாக்களுக்கு பதிலளித்த அண்ணாமலை, முதல்வர் ஸ்டாலினுக்கு 6 கேள்விகளை எழுப்பியுள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

கடந்த 2023-24ம் ஆண்டு சிஏஜி அறிக்கையின்படி 1,540 திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட ரூ.14,808 கோடி நிதி செலவிடப்படாமல் வீணாக்கியது ஏன், 2023-24ம் ஆண்டு மக்களிடம் வசூலிக்கப்பட்ட மின்சார வரி ரூ.1,985 கோடி. இதில் ரூ.507 கோடி தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழக நிறுவனத்தின் ஒருங்கிணைந்த நிதிக்கு செலுத்தாமல் மடைமாற்றியது ஏன்?



மேலும் 2021-22 முதல் 2023-24 வரையிலான 3 ஆண்டுகளில் மத்திய அரசிடம் பெற்ற ஜிஎஸ்டி இழப்பீடுத் தொகையான ரூ.28,024 கோடியில் 10 சதவீதம், உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்க வேண்டும் என்பது மாநில திட்டக்குழுவின் பரிந்துரை. ஆனால், இவை வழங்கப் படவில்லை ஏன்?

தேர்தலின்போது 511 வாக்குறுதிகள் திமுக சார்பில் கொடுக்கப்பட்டன. இவையன்றி ஒவ்வொரு மாவட்டத்துக்கும் தனித் தனியாக வாக்குறுதிகள் கொடுக்கப்பட்டது. இவற்றில் 10 சதவீத வாக்குறுதிகளைக் கூட நிறைவேற்றாமல் 2026 சட்டப்பேரவை தேர்தலை எப்படி சந்திப்பீர்கள்?

ஆட்சிக்கு வருவதற்கு முன்பு, தமிழகத்தின் கடன் சுமையை குறைப்போம் என்று கூறி, கடந்த 4 ஆண்டுகளில் சுமார் ரூ.5 லட்சம் கோடி புதிதாக

கடன் வாங்கியது ஏன்? இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.மேலும், ஜிஎஸ்டி சீர்திருத்தம், சாலை திட்டங்கள், ரயில் திட்டங்கள், 100 நாள் வேலை வாய்ப்பு திட்டம், ஓய்வூதியத் திட்டம், ஜல் ஜீவன் திட்டம், நிதி பகிர்வு உள்ளிட்டவை தொடர்பாக, மத்திய அரசுக்கு நிதியமைச்சர் தங்கம் தென்னரசு எழுப்பிய 10 கேள்விகளுக்கு பதில் அளித்து சமூக வலைதளத்தில் அண்ணாமலை பதிவிட்டுள்ளார்.

# "கூடுதல் தொகுதிகள் வேண்டும்; கூட்டணியில் சேதம் ஏற்பட்டால் அது திமுகவுக்கே பலவீனம்" பெ.சண்முகம் நேர்காணல்

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளராக பொறுப்பேற்ற பின், முதல் சட்டப்பேரவை தேர்தலை எதிர்கொள்ள தயாராகி கொண்டிருக்கிறார் பெ.சண்முகம். அரசியல் கள நிகழ்வுகள், திமுகவுடனான கூட்டணி, தேர்தலுக்கான தொகுதி பங்கீடு உள்ளிட்டவை குறித்து 'இந்து தமிழ் திசை'க்கு அவர் அளித்த பேட்டி.

மார்க்சிஸ்ட் மாநிலச் செயலாளராகப் பொறுப்பேற்ற உங்கள் முன் உள்ள சவால்கள் எவை?

திமுக அல்லது அதிமுகவுடன் மாறி மாறி கூட்டணி வைக்கும் கட்சி என்ற எதிர்மறையான கருத்து பரவியிருப்பதால், மார்க்சிஸ்ட் கட்சியைத் தமிழகத்தில் பலமான கட்சியாக வளர்த்தெடுப்பது தான் முக்கியமான சவால்.

திமுக கொடுத்த, நிறைவேற்றப்படாத வாக்குறுதிகள் குறித்து முதல்வரிடம் முறையிட்டுள்ளீர்களா?

பலமுறை முறையிட்டிருக்கிறேன். குறிப்பாக, அரசு ஊழியர்கள், ஆசிரியர்களின் முக்கிய கோரிக்கையான பழைய ஓய்வூதியத் திட்டத்தை அமல்படுத்துவது குறித்து தேர்தலுக்கு முன்பாக ஒரு முடிவுக்கு வரவேண்டும். அதுதான் 2026 தேர்தலில் இந்தக் கூட்டணியின் வெற்றியை உறுதி செய்யும்.

ஓய்வுபெற்ற போக்குவரத்து ஊழியர்கள் ஓய்வூதிய பலன்களுக்கு தொடர்ந்து போராடி வருகிறார்களே?

போக்குவரத்து ஊழியர்களுக்குத் தரவேண்டிய ரூ.3 ஆயிரம் கோடி நிலுவையில் உள்ளது. இவ்விவகாரத்தில் காலதாமதம் செய்வது ஊழியர்களிடையே கடுமையான அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. பொங்கலுக்கு முன்பு நிலுவைத் தொகை வழங்கப்படும் எனத் துறை அமைச்சர் உறுதியளித்துள்ளார்; அதை அரசு உத்தரவாதப்படுத்த வேண்டும்.

பெண்கள், குழந்தைகள் மீதான பாலியல் வன்கொடுமைகள், கஞ்சா, மது போதை அதிகரிப்பு போன்ற சட்டம் ஒழுங்கு பிரச்சினை குறித்து கூட கூட்டணி கட்சிகள் கண்டனம் தெரிவிக்க தயங்குவது ஏன்?

திருவண்ணாமலை பாலியல் வன்கொடுமை விவகாரத்தில், கட்சியின் மாவட்ட நிர்வாகிகள் ஆர்ப்பாட்டம் நடத்திய நிலையில் சம்பந்தப்பட்ட காவலர்கள் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். இதை தாண்டி அரசை வற்புறுத்த வேறொன்றும் இல்லை. பெண்கள், குழந்தைகள் மீதான பாலியல் வன்கொடுமைகள் விவகாரத்தில் எவ்வித சமரசமும் இன்றி மார்க்சிஸ்ட் கட்சி தொடர்ந்து போராடும்.

திமுக கூட்டணியில் அங்கம் வகிக்கும் நீங்கள் இந்த முறை அதிக இடங்களை கேட்டுப் பெற அழுத்தம் கொடுப்பீர்களா?



கூட்டணி கட்சிகளுக்கு குறைந்த தொகுதி ஒதுக்க திமுக ஆலோசித்து வருவதாக பேச்சு நிலவுகிறதே?

கடந்த தேர்தலில் குறைவான தொகுதிகளில் போட்டியிட்டோம். இந்த முறை கூடுதலான இடங்கள் வேண்டும், சட்டப்பேரவைக்குள் எங்கள் உறுப்பினர்கள் எண்ணிக்கை உயர வேண்டும் என்பதை திமுகவிடம் தெளிவுபடுத்திவிட்டோம். 15 முதல் 20 தொகுதிகளில் களப்பணிகளில் ஈடுபட்டு வருகிறோம். திமுக கூட்டணியில், கூட்டணியின் ஒற்றுமை தான் அதன் வெற்றிக்கு அடிப்படையாக இருக்கிறது. கூட்டணியில் சேதம் ஏற்பட்டால் அது திமுகவுக்கு பலவீனத்தை ஏற்படுத்தும். எங்களைவிட, திமுகவுக்கு அது நன்றாக தெரியும். இதனால் அதற்கு ஒரு பாதகம் ஏற்படும் வகையில் திமுக நடந்துகொள்ள வாய்ப்பில்லை.

அதிமுக பாஜக கூட்டணி உறுதியாகிவிட்டதால் திமுக தரும் தொகுதிகளை வாங்கிக் கொண்டு போட்டியிடுவதைத் தவிர கம்யூனிஸ்ட்களுக்கு வேறு வழியில்லை என்ற கருத்தை ஒப்புக்கொள்வீர்களா?

பாஜக ஆட்சி அதிகாரத்துக்கு வரக்கூடாது என்பதற்காக, அரசியல் தீர்மானத்தின் அடிப்படையில் தான் திமுக கூட்டணியில் தொடர்ந்து செயல்பட்டு வருகிறோம். அதற்கேற்ப அதிமுக பாஜக கூட்டணியைத் தோற்கடிப்பதுதான் பிரதான நோக்கம். இது வேறு வழியில்லாமல் அல்ல.

கரூர் வழக்கை சிபிஐ விசாரிப்பதால் இந்த வழக்கை வைத்து விஜய்யை பாஜக தனது பிடிக்குள் கொண்டுவந்துவிடும் என்ற கருத்து பரவி வருகிறதே?

தவெக தலைவர் விஜய்யை கூட்டணிக்குள் கொண்டுவர அதிமுக பாஜக கடுமையான முயற்சிகளை எடுத்து வருகின்றன. அதனடிப்படையில் நீதிமன்றத்தில் பாஜக தனது செல்வாக்கை பயன்படுத்தி சிபிஐ விசாரணையை பெற்றிருப்பதாகவே சந்தேகம் எழுகிறது. அதற்கேற்ப அதிமுக கூட்டத்திலும் தவெக கொடிகள் பறக்கின்றன. இதன்மூலம் அதிமுக தவெக கூட்டணி ஏற்படும் என்ற தோற்றத்தை ஏற்படுத்துகின்றனர்.

அதிமுக பாஜக கூட்டணியில் தவெகவும் சேர்ந்தால் திமுக கூட்டணிக்கு வரும் வாக்குகளை பாதிக்குமா?

பாஜக கொள்கை எதிரி என சொன்னவர் விஜய். அதை மீறி அவர் பாஜகவுடன் கூட்டணி வைத்தால், தன்னைக் காப்பாற்றிக் கொள்வதற்காகச் சமரசம் செய்துகொண்டார் என்ற பழிச்சொல்லுக்கு ஆளாக நேரிடும். அது அவருக்கு எதிர்மறையாகச் செல்லுமே தவிர சாதகமாகச் செல்ல வாய்ப்பில்லை.

திராவிடக் கட்சிகளுக்கு மாற்றாக ஒரு வலுவான அணி வரவேண்டும் என்ற கருத்தை நீங்கள் ஏற்கிறீர்களா?

மக்கள் நலக் கூட்டணி அந்த அடிப்படையில் உருவாக்கப்பட்டது தான். அவ்வப்போது இதுபோன்ற பரிசோதனை முயற்சிகள் நடந்துகொண்டு தான் இருக்கின்றன. ஆனால் அந்த முயற்சியில் வெற்றிபெற முடியவில்லை.

திமுக ஆட்சியின் முடிவுக்கான 'கவுன்ட் டவுன்' தொடங்கிவிட்டது என்கிறாரே நயினார் நாகேந்திரன்?

அது அவரது ஆசை. ஆனால் அப்படிப்பட்ட ஒரு சூழல் தமிழகத்தில் இல்லை.

தொழில் முதலீட்டை ஈர்க்கும் விவகாரத்தில் அதிமுக அரசிடம் வெள்ளை அறிக்கை கேட்ட திமுக, ஆட்சிக்கு வந்த பிறகு தர மறுப்பதாக எதிர்க்கட்சிகள் விமர்சிப்பதை எப்படி எடுத்துக்கொள்வது?

முதலீடுகள், ஒப்பந்தங்கள், சலுகைகள், வேலைவாய்ப்புகள் குறித்து அரசு வெளிப்படைத் தன்மையுடன் நடந்துகொள்ள வேண்டும். தமிழகத்தின் தொழில் வளர்ச்சியில் அக்கறை கொண்டு தான் அரசு செயல்படுகிறது என்றால் அதை வெளியில் சொல்வதில் என்ன தயக்கம் இருக்க முடியும்.

தெரு பெயர்களில் சாதி பெயரை நீக்கும் முடிவை எப்படி பார்க்கிறீர்கள்?

சாதிப் பெயரை முழுமையாக நீக்க வேண்டும் என்கிற தன்மையில் வெளியிடப்பட்ட அரசாணை அல்ல. உள்ளூர் மட்டத்தில் நீக்கத் தீர்மானிக்கலாம். இதில் ஒரு போதாமை இருப்பதாகவே தான் பார்க்கிறேன்.




# மொத்த பாகிஸ்தானும் பிரம்மோஸ் ஏவுகணையின் வரம்புக்குள் உள்ளது: ராஜ்நாத் சிங்

புதுடெல்லி, அக்.20–

பாகிஸ்தானின் ஒவ்வொரு அங்குலமும் நமது பிரம்மோஸ் ஏவுகணையின் வரம்புக்குள்தான் உள்ளது என பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

உத்தரப்பிரதேசத்தின் லக்னோவில் அமைக்கப்பட்ட பிரம்மோஸ் ஏவுகணை உற்பத்தி மற்றும் சோதனை மையத்தில் இருந்து முதல் தொகுப்பு பிரம்மோஸ் ஏவுகணைகள் வெற்றிகரமாக வெளியாகி உள்ளன. பிரம்மோஸ் ஏவுகணைகளின் முதல் தொகுதியை பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் கொடியசைத்து தொடங்கிவைத்தார்.

நிகழ்ச்சியில் பேசிய ராஜ்நாத் சிங், “நமது ராணுவத்தின் வெற்றி என்பது நிகழும் ஒரு சம்பவம் அல்ல; மாறாக அது நமது ராணுவத்தின் வழக்கம் என்பதை ஆபரேஷன் சிந்தூர் நிரூபித்துவிட்டது. நமது எதிரிகள் இனி பிரம்மோஸ் ஏவுகணையிடம் இருந்து தப்பிக்க முடியாது என்று நாடு நம்பிக்கை கொண்டுள்ளது. பாகிஸ்தானின் ஒவ்வொரு அங்குலமும் நமது பிரம்மோஸ் ஏவுகணை அடையும் வரம்புக்குள்தான் உள்ளன.

ஆபரேஷன் சிந்தூர் ராணுவ நடவடிக்கையின்போது நடந்தது வெறும் ட்ரெய்லர் மட்டுமே. அந்த ட்ரெய்லரே, இந்தியா மறுபிறப்பை கொடுத்துள்ளது என பாகிஸ்தான் எண்ணிப் பார்க்கும் வகையில் அமைந்துவிட்டது. அப்படியானால், நமது முழுப் பலமும் வெளிப்படுமானால்.. அதற்கு மேல் நான் சொல்ல விரும்பவில்லை.

பிரம்மோஸ் குழுவினர் ஒரு மாதத்துக்குள் இரண்டு நாடுகளுடன் ரூ.4,000 கோடி மதிப்புள்ள ஒப்பந்தங்களில் கையழுத்திட்டுள்ளார்கள். வரும் ஆண்டுகளில், வெளிநாடுகளைச் சேர்ந்த நிபுணர்கள் லக்னோவுக்கு வருவதைக் காண்போம். லக்னோவில் உள்ள இந்த பிரம் மோஸ் மையம், ஒரு அறிவு மையமாகவும் பாதுகாப்பு தொழில்நுட்பத்தில் முன்னணி நிறுவனமாகவும் வரும் ஆண்டுகளில் மாறும். அடுத்த நிதியாண்டில் இருந்து பிரம்மோஸ் லக்னோ பிரிவின் ஆண்டு வருவாய் ரூ. 3,000 கோடியாக இருக்கும். ஜிஎஸ்டி வருவாய் ரூ. 5,000 கோடியாக இருக்கும்“ என தெரிவித்தார். இந்நிக ழ்ச்சியில், உத்தரப்பிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# தீபாவளியையொட்டி சென்னையில் இருந்து 8 லட்சம் பேர் பயணம்: அரசு பேருந்து, ரயில்களில் அலைமோதிய மக்கள் கூட்டம்

சென்னை, அக்.20–

தீபாவளியையொட்டி சென்னையில் இருந்து 8 லட்சத்துக்கும் மேற்பட்டோர் சொந்த ஊர்களுக்கு பயணம் மேற்கொண்டுள்ளனர். இதனால் அரசு பேருந்து, ரயில்களில் மக்கள் கூட்டம் அலை மோதியது. தீபாவளி யை முன்னிட்டு சிறப்பு பேருந்துகள் இயங்கத் தொடங்கின. இதையொட்டி கிளாம்பாக்கத்தில் அமைச்சர் சா.சி.சிவசங்கர் ஆய்வு செய்தார். அப்போது, ஓட்டுநர், நடத்துநர்களிடம் பேருந்துகளை பாதுகாப்பாக இயக்க அறிவுறுத்தினார். பயணிகளிடமும் பேருந்து இயக்கம் குறித்து கேட்டறிந்தார்.



கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்தில் பயணிகளின் கூட்டம் அலை மோதியது. அரசு பேருந்துகளின் இயக்கம் குறித்து அறிந்து கொள்வதற்கும் புகாரளிப்பதற்கும் 94450 14436 என்ற எண்ணையும், ஆம்னி பேருந்துகளில் அதிககட்டண வசூல் புகார்களுக்கு 1800 425 6151, 04424749002 ஆகிய எண்களையும் தொடர்பு கொள்ளலாம். தெற்கு ரயில்வே சார்பில் 20க்கும் மேற்பட்ட சிறப்பு ரயில்கள் இயக்கப்பட்டன.

வெளிமாநிலத்தைச் சேர்ந்தவர்கள், தென் தமிழகத்துக்கு பயணிப்போர் என லட்சக்கணக்கானோர் திரண்டனர். இவர்களை பாதுகாப்பாக அனுப்பிவைக்கும் பணியை ரயில்வே பாதுகாப்பு படையினர் மேற்கொண்டிருந்தனர். சென்ட்ரல், தாம்பரம், எழும்பூர் ரயில் நிலையங்களில் முன்பதிவில்லா பெட்டி அருகே நீண்ட வரிசையில் பயணிகள் காத்திருந்து இடம்பிடித்தனர்.

இந்த நிலையங்களுக்குச் செல்வோராலும், கடைவீதிக்குச் சென்றோராலும் தி.நகர், கோடம்பாக்கம், சைதாப்பேட்டை உள்ளிட்ட இதர நிலையங்களில் கூட்ட நெரிசல் காணப்பட்டது.

இவ்வாறு அரசு பேருந்து, ரயில், ஆம்னி பேருந்து உள்ளிட்டவை வாயிலாக கடந்த 2 நாட்களில் சுமார் 8 லட்சம் பேர் சொந்த ஊர்களுக்கு பயணித்துள்ளனர். இன்றும், நாளையும் சிறப்பு பேருந்து, ரயில்கள் இயக்கப்படவுள்ளன. இதற்கிடையே தீபாவளியையொட்டி, விமானக்கட்டணமும் 6 மடங்கு வரை அதிகரித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

# ‘சீட்டை வாங்கிக் கொண்டு தான் விருதுநகருக்கு வருவேன்!’ ராஜேந்திர பாலாஜியை மிரட்டும் பாண்டியராஜன் சபதம்

சென்னை, அக்.20–

முன்னாள் அமைச்சர் ராஜேந்திர பாலாஜி வரிசையாக முட்டுக்கட்டைகளை எடுத்து வீசினாலும், ‘‘அதையெல்லாம் தகர்த்து விருதுநகர் சீட்டை வாங்கிக் கொண்டு தான் ஊருக்கு வருவேன்’’ என சபதமாகவே சொல்லிக் கொண்டிருக்கிறாராம் முன்னாள் அமைச்சர் மா.ஃபா பாண்டியராஜன்.





மா.ஃபா பாண்டிய ராஜன் 2011 சட்டமன்றத் தேர்தலில் விருதுநகரில் தேமுதிக வேட்பாளராகப் போட்டியிட்டு வெற்றிபெற்றார். பின்னர், அதிமுகவில் இணைந்தார். அதன் பிறகு, 2016ல் ஆவடி தொகுதியில் வென்று அமைச்சரும் ஆனார். அப்போது மதுரை திருமங்கலம் தொகுதியில் வெற்றிபெற்ற ஆர்.பி.உதயகுமாரும் சிவகாசியில் வெற்றிபெற்ற கே.டி.ராஜேந்திர பாலாஜியும் அமைச்சரானார்கள். இருந்தபோதும் உதயகுமாரும் பாண்டிய ராஜனும் விருதுநகர் மாவட்டத்தை விட்டு வெளியே போய்விட்டதால் விருதுநகரில் தனிக்காட்டு ராஜாவாகிப் போனார் ராஜேந்திர பாலாஜி.

இந்நிலையில், கடந்த மக்களவை தேர்தல் சமயத்தில் பாண்டியராஜன் விருதுநகரில் வீடுகட்டி குடியேறினார். அந்தத் தேர்தலில் விருதுநகர் தொகுதியில் போட்டியிடவும் அவர் ஆயத்தமாக இருந்தார். ஆனால், இவரது மீள்வருகையை ரசிக்காத ராஜேந்திர பாலாஜி, தந்திரமாக விருதுநகர் தொகுதியை தேமுதிகவுக்கு தள்ளிவிட்டதாகச் சொல்வார்கள். அப்போது முதலே பாண்டியராஜனுக்கும் பாலாஜிக்கும் பனிப்போர் தொடர ஆரம்பித்து விட்டது.

பாலாஜியின் நடவடிக்கைகளால் விருதுநகர் அரசியலில் அதிகம் தலைக்காட்டாமல் ஒதுங்கிய பாண்டியராஜன், மும்பைப் பக்கம் தனது பிசினஸ் தொடர்பான வேலைகளில் பிசியாகிப் போனார். தேவையற்ற சர்ச்சைகள் ஏற்படுவதை தவிர்க்கலாமே என பழனிசாமியின் விருதுநகர் பிரச்சாரப் பயணத்தின் போதுகூட விருதுநகர் மாவட்டத்துப் பக்கம் வரவில்லை பாண்டியராஜன்.

இந்த நிலையில், தற்போது சென்னைக்கும் மும்பைக்குமாக பறந்து கொண்டிருக்கும் மா.ஃபா பாண்டியராஜன், “விருதுநகர் மாவட்டத்தில் சும்மா வெத்துவெட்டு அரசியல் செய்ய விரும்பவில்லை. உரிமையுடன் வந்து உருப்படியாய் அரசியல் செய்யலாம் என நினைக்கிறேன்.

இம்முறை விருதுநகர் தொகுதியில் போட்டியிட தலைமையிடம் சீட்டை உறுதிப்படுத்திக் கொண்டு தான் ஊருக்குத் திரும்புவேன்’’ என்று கிட்டத்தட்ட தனது விசுவாச வட்டத்தில் சபதமே செய்திருக்கிறாராம். இதனால், மறுபடியும் தங்களுக்கு வாழ்வு கிடைத்துவிட்டது போல் மா.ஃபா ஆதரவாளர்கள் மகிழ்ச்சிக் கடலில் திளைத்துக் கொண்டிருக்கிறார்கள்.



# பஞ்சலிங்க அருவியில் காட்டாற்று வெள்ளம் அமணலிங்கேஸ்வரர் கோயில் வளாகம் மூழ்கியது

உடுமலை, அக்.20-

திருமூர்த்திமலை பஞ்சலிங்க அருவியில் நள்ளரவில் காட்டாற்று வெள்ளம் பெருக்கெடுத்தது. இதனால் அடிவாரத்தில் உள்ள அமணலிங்கேஸ்வரர் கோயில் வளாகம் நீரில் மூழ்கியது. சுற்றுலா பயணிகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. திருப்பூர் மாவட்டம் உடுமலையில் இருந்து சுமார் 22 கிமீ தொலைவில் திருமூர்த்திமலை உள்ளது. இங்கு புகழ்பெற்ற அமணலிங்கேஸ்வரர் கோயில் உள்ளது. கோயிலுக்கு தினசரி ஏராளமான பக்தர்கள் வந்து வழிபட்டு செல்கின்றனர். கோயிலுக்கும், பஞ்சலிங்க அருவியில் குளித்து மகிழவும் சுற்றுலா பயணிகளும், பக்தர்களும் அதிகளவில் வருகின்றனர்.

வடகிழக்கு பருவமழை காரணமாக, கடந்த சில தினங்களாக திருமூர்த்தி மலைப்பகுதியில் மழை பெய்து வருகிறது. கனமழையால் அருவிக்கு நீர்வரத்து அதிகரித்ததால் கடந்த 2 தினங்களாக அருவியில் குளிக்க சுற்றுலா பயணிகள் அனுமதிக்கப்படவில்லை. நேற்று இரவு 11 மணியளவில் மேற்கு தொடர்ச்சி மலையில் பெய்த கனமழை காரணமாக அருவியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. தோணி ஆற்றில் கரைபுரண்டு ஓடிய காட்டாற்று வெள்ளம், அடிவாரத்தில் உள்ள அமணலிங்கேஸ்வரர் கோயில் வளாகத்தை மூழ்கடித்தபடி திருமூர்த்தி அணைக்கு சென்றது.

வெள்ளப்பெருக்கு ஏற்படும்போது, பிரம்மா, விஷ்ணு, சிவன் சிலைகள் அமைந்துள்ள கோயில் வளாகத்தில் மட்டுமே தண்ணீர் சூழ்ந்தபடி செல்லும். ஆனால் இரவு கட்டுக்கடங்காத வெள்ளம் காரணமாக அருகில் உள்ள விநாயகர் கோயில், சப்தகன்னியர் கோயில்களையும் வெள்ளம் சூழ்ந்தது. அமணலிங்கேஸ்வரர் கோயில் வளாகம் பாதியளவுக்கு மூழ்கும் வகையில் வெள்ளம் ஆர்ப்பரித்து சென்றது. வெள்ளத்தில் அடித்துவரப்பட்ட மரக்கிளைகள் கோயில் வளாகத்தில் பெருமளவு தேங்கியது. இன்று காலை வெள்ளம் குறைந்தது. இருப்பினும் அருவிக்கு செல்ல 3வது நாளாக தடை விதிக்கப்பட்டுள்ளது. கோயில் வளாகத்தை தூய்மை செய்யும் பணி நடப்பதால் பக்தர்கள் தரிசனம் செய்ய அனுமதிக்கப்படவில்லை.

# உத்தர பிரதேச மாநிலத்தில் ஓநாய்களை வேட்டையாடும் பணி தீவிரம்: முதல்வர் யோகி ஆதித்யநாத் உத்தரவால் கிராம மக்கள் நிம்மதி

உத்தர பிரதேசம், அக்.20–

உத்தர பிரதேச மாநிலம் பஹரைச் மாவட்ட கேசர்கஞ்சின் கிராமங்களில் கடந்த செப்டம்பர் 9 முதல் ஓநாய்கள் நடமாட்டம் அதிகரித்துள்ளது. இமயமலை அடிவாரத்தில் நதிக்கரைகளில் பொதுமக்கள் வாழும் பகுதியில் ஓநாய்கள் தாக்கியதில் 4 குழந்தைகள், ஒரு பெண் உள்ளிட்ட 6 பேர் உயிரிழந்தனர். 11 குழந்தைகள் உட்பட 29 பேர் காயமடைந்தனர்.



தகவல் அறிந்து அதிர்ச்சி அடைந்த முதல்வர் யோகி ஆதித்யநாத், செப்டம்பர் 27ம் தேதி நேரில் சென்று பாதிக்கப்பட்ட மக்களை சந்தித்து பேசினார். பின்னர் அந்தப் பகுதியை வான்வழியாகவும் வன அதிகாரிகளுடன் ஆய்வு செய்தார்.

பின்னர், ஓநாய்களை பிடிக்க முடியாவிட்டால் சுட்டுக் கொல்லும்படி அதிகாரிகளுக்கு முதல்வர் ஆதித்யநாத் உத்தரவிட்டார். இதற்காக, பஹரைச் உள்ளிட்ட மண்டல வன உயரதிகாரி செம்மாறன் நியமிக்கப்பட்டுள்ளார். தமிழரான செம்மாறன் தலைமையில் 32 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இக்குழுக்கள் ஓநாய் தாக்குதலை தடுக்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

இதுகுறித்து ‘இந்து தமிழ் திசை’ நாளிதழிடம் கால்நடை மருத்துவம் பயின்ற உயரதிகாரி செம்மாறன் கூறும்போது, “குழந்தைகளைக் குறி வைத்து ஓநாய்கள் தாக்குகின்றன. பாதிக்கப்பட்ட 50 குக்கிராமங்களில் வசிக்கும் 40,000 பொதுமக்களிடம் விழிப்புணர்வு பிரச்சாரம் தொடங்கி உள்ளோம். வெப் டிரோன் குழு, கண்காணிப்பு குழு, அமைதிப்படுத்தும் குழு, துப்பாக்கிச் சூடு குழு, வலை மூலம் பிடிக்க குழு என 5 வகை குழுக்களும் களம் இறங்கியுள்ளன.

இதில், 4 ஓநாய்கள் பிடிக்கும் போதே இறந்துவிட்டன. கடைசி கட்ட முயற்சியாக ஓநாயை வேட்டையாடவும் அரசு அனுமதி அளித்துள்ளது. ஒரு ஓநாய் காயமடைந்து தப்பிவிட்டது. இன்னொரு ஓநாய் அலைந்து தாக்குதல் நடத்த அவ்வப்போது வருகிறது. இவற்றையும் விரைவில் பிடிப்போம்’’ என்று அதிகாரி செம்மாறன் கூறினார்.

ஓநாய்கள் தாக்குதலால் கடந்த ஒரு மாதமாக மூடப்பட்டிருந்த பள்ளிகளை, தீபாவளிக்கு பிறகு திறக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. ஓநாய்களால் காயம் அடைந்தவர்களுக்கு சிகிச்சை அளிக்க தற்காலிக மருத்துவமனைகள் அமைக்கப்பட்டுள்ளன. ஆம்புலன்ஸ்களும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. இதுபோன்ற நடவடிக்கைகளால் ஓநாய்களால் படுகாயமடைந்த 15 பேர் காப்பாற்றப்பட்டுள்ளனர்.

மேலும், ஓநாய்களால் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா ரூ.5 லட்சம், காயம் அடைந்தவர்களுக்கு ரூ.50,000 இழப்பீடு வழங்க உ.பி. அரசு உத்தரவிட்டுள்ளது. கடந்த ஆண்டும் பஹரைச்சில் ஓநாய்கள் தாக்குதலில் 9 பேர் உயிரிழந்தனர். தற்போது ஓநாய் தாக்குதலை வனத்துறையினர் கட்டுப்பாட்டில் கொண்டு வந்துள்ளனர்.

# டாக்கா விமான நிலையத்தில் பயங்கர தீ விபத்து: வங்கதேசத்தில் விமான சேவை நிறுத்தம்

டாக்கா, அக்.20-

வங்கதேச தலைநகர் டாக்காவில் உள்ள சர்வதேச விமான நிலையத்தின் சரக்கு வளாகத்தில் மிகப் பெரிய தீ விபத்து ஏற்பட்டது. அப்பகுதி முழுவதும் அடர்ந்த கரும்புகை சூழ்ந்ததால் அனைத்து விமான சேவைகளும் நிறுத்தப்பட்டுள்ளன.



டாக்காவில் உள்ள ஹஸ்ரத் ஷாஜலால் சர்வதேச விமான நிலையத்தில் இன்று பிற்பகலில் தீ விபத்து ஏற்பட்டதாக வங்கதேச சிவில் விமானப் போக்குவரத்து ஆணையம் (CAAB) தெரிவித்துள்ளது. இதன் காரணமாக 36க்கும் மேற்பட்ட தீயணைப்பு வாகனங்கள் சம்பவ இடத்துக்கு விரைந்தன. இது குறித்து பேசிய டாக்கா தீயணைப்பு சேவை செய்தித் தொடர்பாளர் தல்ஹா பின் ஜாசிம், “பிற்பகல் 2:30 மணிக்கு எங்களுக்குத் தகவல் கிடைத்தது, உடனடியாக விமான நிலையத்தில் தீயணைப்பு பணிகளுக்காக வாகனங்களை அனுப்பினோம்’’ என்று கூறினார்.

விமானப் படையின் தீயணைப்புப் பிரிவுகளும் மீட்புப் பணியில் இணைந்துள்ளதாக வங்கதேச சிவில் விமானப் போக்குவரத்து ஆணைய அதிகாரிகள் தெரிவித்தனர். மேலும், மறு அறிவிப்பு வரும் வரை அனைத்து விமானங்களின் தரையிறக்கங்களும், புறப்படுதலும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன என்றும், அனைத்து விமானங்களும் பாதுகாப்பாக உள்ளன என்றும் அதிகாரிகள் கூறினர்.

டாக்காவில் தரையிறங்க திட்டமிடப்பட்டிருந்த ஒன்பது விமானங்கள் தீவிபத்து காரணமாக சட்டோகிராம் மற்றும் சில்ஹெட்டில் உள்ள விமான நிலையங்களுக்கு திருப்பி விடப்பட்டன. அவற்றில் எட்டு விமானங்கள் சட்டோகிராமிலும், ஒன்று சில்ஹெட்டிலும் தரையிறங்கியது. சரக்கு முனையத்தில் சேமிக்கப்பட்டிருந்த ரசாயனங்கள் தீயணைப்பு வீரர்களுக்கு பெரும் சவாலாக உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ராணுவம், விமானப்படை, கடற்படை மற்றும் வங்கதேச எல்லைக் காவல்படை (BGB) வீரர்கள் தீயணைப்பு படையினர் இணைந்து மீட்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

# தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்துள்ளது: வானிலை ஆய்வு மைய தென்மண்டல இயக்குநர் அமுதா பேட்டி

சென்னை, அக்.20-

தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்துள்ளது என வானிலை ஆய்வு மைய தென்மண்டல இயக்குநர் அமுதா பேட்டி அளித்துள்ளார். தமிழ்நாட்டில் பெரும்பாலான இடங்களில் மழை பெய்துள்ளது. தமிழ்நாட்டில் 17 இடங்களில் கனமழை பதிவாகி உள்ளது. தெற்கு கேரளா மற்றும் அதனை ஒட்டிய குமரிக் கடல் பகுதிகளில் வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. அரபிக் கடலில் உருவான தீவிர காற்றழுத்த தாழ்வு பகுதி அதே இடத்தில் நீடிக்கிறது.

சென்னையில் வரும் 23ஆம் தேதி மிக கனமழைக்கான ஆரஞ்ச் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அக்டோபர் 16ஆம் தேதி தொடங்கிய வடகிழக்கு பருவமழை தமிழ்நாட்டில் தீவிரமடைந்துள்ளது. கடந்த ஆண்டு வடகிழக்கு பருவமழை காலத்தில் தமிழ்நாட்டில் 58.9 சென்டிமீட்டர் மழை பெய்த நிலையில், இந்த ஆண்டு அதிகரிக்க வாய்ப்புள்ளதாக கூறினார். தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை இந்த ஆண்டு இயல்பை விட அதிகரித்து காணப்படும் என்றும் அமுதா தெரிவித்துள்ளார்.



தமிழ்நாட்டில் அக்டோபர் 1 முதல் 16ஆம் தேதி வரை வழக்கத்தை விட கூடுதலாக 37 சதவீதம் மழைப்பொழிவு ஏற்பட்டுள்ளதாக கூறியுள்ளார். தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை காலத்தில் இந்த ஆண்டு 50 சென்டிமீட்டர் வரை மழைப்பொழிவு இருக்கக்கூடும் என்றும் தெரிவித்தார். விருதுநகர், தென்காசி, தூத்துக்குடி, குமரி, நெல்லை ஆகிய மாவட்டங்களில் நாளை மிக கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அக்டோபர் 24ஆம் தேதி மற்றொரு காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகும் எனவும் தெரிவித்துள்ளார். இத்தனை புயல்கள் வரும் என்பதை கணக்கிட்டு கூற முடியாது என்றும் தெரிவித்துள்ளார். அடுத்த ஏழு நாட்களுக்கு தமிழகத்தில் கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும் இரண்டு நாட்களுக்கு சில மாவட்டங்களில் மிக கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். தமிழக கடலோரப் பகுதிகள், கேரள கடலோரப் பகுதிகள், லட்சத்தீவு, மாலத்தீவு பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம் என்றும் எச்சரிக்கை விடுத்தார். கடலுக்குச் சென்ற மீனவர்கள் வரும் 21ம் தேதி காலைக்குள் கரைக்குத் திரும்ப வானிலை மையம் அறிவுறுத்தியுளளார்.

# சாலையோர கடைகளால் விற்பனை பாதிப்பு: ஈரோடு ஜவுளி கடை உரிமையாளர்கள் சாலை மறியல்




ஈரோடு, அக.20-

ஈரோடு பன்னீர்செல்வம் பூங்கா சந்திப்பில் மாநகராட்சியின் ஒருங்கிணைந்த ஜவுளி வணிக வளாகம் உள்ளது. இங்கு 400க்கும் மேற்பட்ட ஜவுளி கடைகள் செயல்பட்டு வருகிறது. தீபாவளி பண்டிகையையொட்டி வணிக வளாகத்தில் உள்ள ஜவுளிக் கடைகளில் வழக்கத்திற்கு மாறாக மக்கள் கூட்டம் குறைந்து காணப்பட்டது.


இதற்கு சாலையோரத்தில் அமைக்கப் பட்டுள்ள ஜவுளிக்கடைகளே காரணம் என வணிக வளாக ஜவுளிக் கடை உரிமையாளர்கள் புகார் எழுப்பியுள்ளனர். மேலும் சாலையோர ஜவுளிக்கடைகளை அகற்ற வலியுறுத்தி நேற்று மாலை வணிக வளாக கடை உரிமையாளர்கள் ஈரோடு மணிக் கூண்டு அருகே திடீரென சாலை மறியலில் ஈடுபட்டனர்.

இதனால் அப்பகுதியில் வாகனப் போக்குவரத்து ஸ்தம்பித்தது. ஈரோடு டவுன் போலீஸ் டிஎஸ்பி முத்துக்குமரன் தலைமையிலான போலீஸார் மறியலில் ஈடுபட்ட கடை உரிமையாளர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தினர். அப்போது பன்னீர்செல்வம் பூங்கா சந்திப்பு முதல் மணிக்கூண்டு வரை சாலையோரம் ஏராளமான ஜவுளி கடைகளை அமைத்ததால், வணிக வளாகத்திற்குள் பொதுமக்கள் செல்வது குறைந்துள்ளது.

இதுதொடர்பாக அனைத்து சிறு, ஜவுளி வியாபாரிகள் சங்கத்தின் சார்பில் மாநகராட்சி ஆணையர், போலீஸ் எஸ்பி, ஆட்சியர் ஆகியோரிடம் தனித்தனியாக மனு அளிக்கப்பட்டது. சென்னை உயர்நீதிமன்றத்திலும் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அதிகாரிகளிடம் மனு அளித்தும் நடவடிக்கை எடுக்கவில்லை. உரிய நடவடிக்கை எடுக்கும் வரை மறியல் போராட்டம் தொடரும், என்றனர். அவர்களை சமரசம் செய்த காவல் துறையினர் சாலையை ஆக்கிரமித்து கடை அமைத்திருந்த வியாபாரிகளை அங்கிருந்து அப்புறப்படுத்த நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார்.

இதையேற்று சாலை மறியலை கைவிட்டு அனைவரும் கலைந்து சென்றனர். இச்சம்பவத்தால் அப்பகுதியில் அரை மணி நேரம் வாகனப் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. காவல் துறையினர் போக்குவரத்தை சீரமைத்தனர்.



# பட்டாசு காயங்களுக்கு சிறப்பு முகாம்: வாசன் கண் மருத்துவமனை புதிய அறிவிப்பு

கோவை, அக்.20-

15 வயதிற்குக் குறைவான குழந்தைகளுக்கான இலவச கண் பரிசோதனை முகாமை வாஸன் கண் மருத்துவமனை அறிமுகப்படுத்தி இருக்கிறது.

அக்டோபர் 15 முதல் 24, 2025 வரை பட்டாசு காயங்க ளுக்கு சிறப்பு முகாம்"

15 வயதிற்குக் குறைவான குழந்தைகளுக்கான பட்டாசு தொடர்பான கண் காயங்களுக்கு இலவச கண் பரிசோதனை வழங்கும் சிறப்பு சமூக நல முயற்சியை வாசன் கண் மருத்துவமனை அறிவித்துள்ளது. இந்த முகாம் அக்டோபர் 15 முதல் 24 2025 வரை அனைத்து வாசன் கண் மருத்துவமனை மையங்களிலும் நடைபெறும். "பட்டாசு காயங்களால் பாதிக்கப்பட்ட குழந்தைகளில் நிரந்தர பார்வை இழப்பைத் தடுக்க உடனடி மருத்துவ சிகிச்சை அவசியம். இத்தகைய அவசர நிலைகளை கையாள எங்கள் அனுபவ மிக்க நிபுணர் குழு முழுமையாக தயாராக உள்ளது."என்று வாசன் கண் மருத்துவமனையின் கண் மருத்துவ நிபுணர்கள் தெரிவித்தனர்.

திருவிழா காலத்தில் பெற்றோர்கள் மற்றும் பொதும க்கள் பாதுகாப்பாகவும் பொறுப்புடன் கொண்டாடவும், மேலும் கண் எரிச்சல் அல்லது காயம் ஏற்பட்டால் தாமதமின்றி நிபுணர் ஆலோசனை பெறவும் வாசன் கண் மருத்துவமனை கேட்டுக்கொண்டுள்ளது.

இந்த முயற்சி, சமூக கண் நலம், அவசர சிகிச்சை மற்றும் தடுப்பு விழிப்புணர்வில் வாசன் கண் மருத்துவமனையின் அர்ப்பணிப்பை வலியுறுத்துகிறது.

மேலும் தகவல்கள் அல்லது உதவிக்காக, உங்களுக்குச் சமீபத்தில் உள்ள வாசன் கண் மருத்துவமனை மையத்தை அணுகவும் அல்லது 1800 571 3333 என்ற எண்ணில் உடனடியாக தொடர்பு கொள்ளவும்.




# தூத்துக்குடியில் ரூ.5 கோடி மதிப்பு சீன பட்டாசுகள் பறிமுதல்: மும்பை தொழிலதிபர்கள் உட்பட 4 பேர் கைது

தூத்துக்குடி, அக்.20-

சீனாவில் இருந்து தூத்துக்குடிக்கு கப்பலில் வந்த ரூ.5 கோடி மதிப்பிலான சீன பட்டாசுகள் பறிமுதல் செய்யப்பட்டன. இது தொடர்பாக மும்பை தொழிலதிபர்கள் உட்பட 4 பேர் கைது செய்யப்பட்டனர்.

தீபாவளியை முன்னிட்டு தடை செய்யப்பட்ட சீன பட்டாசுகள் கடத்தப்படுகிறதா என்று மத்திய வருவாய் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள், சுங்கத் துறை அதிகாரிகள் ஆகியோர் கண்காணித்து வருகின்றனர்.

இந்நிலையில், சீனாவின் நிங்பே துறைமுகத்தில் இருந்து தூத்துக்குடிக்கு வந்த கப்பலில், தூத்துக்குடியைச் சேர்ந்த ஒரு நிறுவனத்துக்கு இரு கன்டெய்னர்கள் வந்தன. அவற்றில் இன்ஜினீயரிங் பொருட்கள் இருப்பதாக ஆவணங்களில் குறிப்பிடப்பட்டிருந்தது. மத்திய வருவாய் புலனாய்வு பிரிவு அதிகாரிகள் அந்த இரு கன்டெய்னர்களையும் திறந்து சோதனையிட்டனர். அப்போது, தகரம், பிளாஸ்டிக் போன்ற பொருட்களை ஒட்டுவதற்குப் பயன்படும் சிலிக்கான் பசை போன்றவை இருந்தன. அவற்றுக்கு அடியில் இந்தியாவில் தடை செய்யப்பட்ட சீன பட்டாசுகள் மறைத்து வைக்கப்பட்டிருந்தன. அவற்றின் மதிப்பு ரூ.5 கோடியாகும். சட்டவிரோதமாக சீன பட்டாசுகள் இறக்குமதியில் ஈடுபட்ட தூத்துக்குடி திரேஸ்புரத்தை சேர்ந்த மைக்கேல் ஜேக்கப் ஜெயசேகரன், சூசை மாணிக்கம் ஜெயேந்திரன், மும்பையை சேர்ந்த தொழிலதிபர்கள் விகாஷ் பட்டேஷ்வர் தவுபி, தசரத் மச்சீந்தரா கோக்கரே ஆகிய 4 பேரும் கைது செய்யப்பட்டு, பாளையங்கோட்டை மத்திய சிறையில் அடைக்கப்பட்டனர். மேலும், தப்பியோடிய மும்பையை சேர்ந்த தொழிலதிபர் ஒருவரை போலீஸார் தேடி வருகின்றனர்.



# ஸ்டார் ஹெல்த் இன்சூரன்ஸ் இலவச மெகா மருத்துவ முகாம்

கோவை, அக்.20-

கோவை ஆவாரம்பாளையம் பகுதியில் உள்ள தனியார் கூட்டரங்கில் ஸ்டார் ஹெல்த் இன்சூரன்ஸ் முகவர்களுக்கும் குடும்பத்தினருக்கும் இலவச மெகா மருத்துவ முகாம் நடைபெற்றது.

இம்முகாமிற்கு சிறப்பு விருந்தினராக மேயர் ரங்கநாயகி ராமச்சந்திரன் கலந்து கொண்டு குத்து விளக்கேற்றிரிப்பன் வெட்டி துவக்கி வைத்தார்.

இம்முகாமில் 500க்கும் மேற்பட்டோர் பயனடைந்தனர். மேலும் பல முன்னணி மருத்துவ மனைகள் மற்றும் மருத்துவ நிறுவன ங்களுக்கும் அவர்களின் குடும்பத்தினருக்கும் முன்னெச்சரிக்கை மருத்துவ சேவைகள் மற்றும் நலத்திட்டங்களை இணைந்து, முகவர்களுக்கும் முன்னெடுக்க நடைபெற்றது.

இதில் பொதுமருத்துவம், எலும்பியல். மகளிர் நலம், கண், பல், உடற்பயிற்சி ஒருங்கிணைந்த முகாமில், தலா ரூ.6,000 மதிப்பிலான சேவைகளை மற்றும் ஊட்டச்சத்து ஆலோசனை ஆகிய பல்வேறு பரிசோதனைகள் வழங்கினர்.

பாலாஜிபாபு பிசினஸ் ஹெட் முகவர்களின் நலனுக்காக இத்தகைய மருத்துவ முகாம்களை நடத்துவதின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி, அவர் கோயம்புத்தூர் மண்டலம் இந்நிதியாண்டில் ரூ.210+ கோடி புதிய வணிகத்தையும், ரூ.143.50 கோடி மதிப்பிலான 23,800+ கிளைம்ஸ்களை தீர்வு செய்துள்ளதையும் குறிப்பிட்டார்.

ஸ்ரீராம் ரகுநந்தனன் சி ஹெஸ் ஆர் ஓ ஸ்டார் ஹெல்த் இன்சூரன்ஸ் நிறுவனத்தின் முகவர் நலனை முன்னெடுத்தல் பற்றிய முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார்.

இந்நிகழ்வில் பிரபு ராஜமாணிக்கம் ஜோனல் ஹெட் ஊழியர்கள், முகவர்கள், மண்டல மேலாளர்கள், கிளை மேலாளர்கள் மற்றும் டாக்டர் ஹரிதா வாசுதேவன் ஆப்ரேசன் தலைமை, வாசன் ஐ கேர் டாக்டர் ஹசீப் கான் எம்டி, ஏரோ மல்டி ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை முகுந்த் கிளை மேலளார்கள் பழனிசாமி சரவணன் குணசேகர் டாக்டர் சௌம்யா ஜோனல் கிளைம் ஹெட் மற்றும் கோவை குழுவினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்



# 3 மாதங்களில் 10,000 கி.மீ. பயணம் சைக்கிளில் உலகம் சுற்றும் பிரான்ஸ் இளைஞர் புதுச்சேரி வருகை

புதுச்சேரி, அக்.20-

சைக்கிளில் உலகம் சுற்றும் பிரான்ஸ் இளைஞர் புதுச்சேரி வந்துள்ளார். அவர் 3 மாதங்களில் 10 ஆயிரம் கி.மீ தொலைவு பயணிக்கிறார்.

பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்தவர் இனோ சூரன். இவர், பாரிஸ் நகரில் இருந்து சைக்கிளில் புதுவைக்கு வந்துள்ளார். தனது பெற்றோரின் ஊரான இலங்கையின் யாழ்ப்பாணத்துக்கு இவர் சைக்கிளில் செல்லும் பயணத்தை தொடங்கினார். 3 மாதங்களாக 10 ஆயிரம் கி.மீ தொலைவு கடந்து வந்துள்ளார். அவர் தனது பயணம் குறித்து விவரித்ததாவது: ஒவ்வொரு நாட்டிலும் மக்களைப் பார்க்க வேண்டும். அங்கு பின்பற்றும் கலாச்சாரத்தை தெரிந்து கொள்ள வேண்டும் என்பது எனது ஆசை. அதற்கு வேகம் ஒத்து வராது. மெதுவாக சைக்கிளில் சென்றால்தான் முடியும். இதற்காக சைக்கிள் பயணத்தை தேர்ந்தெடுத்தேன். நாள் ஒன்றுக்கு 50 முதல் 100 கி.மீ. தொலைவு வரை பயணம் செய்தேன். ஆங்காங்கே மக்கள் அன்புடன் பேசினர். தங்கள் வீடுகளில் தங்க வைத்து உபசரித்து அனுப்பினர். தனி ஆளாக செல்வது ஆபத்து என பலர் கூறினாலும் மக்களோடு மக்களாய் பழகி பயணம் செய்கிறேன்.

இந்தியாவுடன் சேர்த்து இதுவரையில் 13 நாடுகளை கடந்து வந்துள்ளேன். இலங்கையில் மக்கள் நல்ல நிலைக்கு வரத் தொடங்கி விட்டனர். இதனால் என் தாய் நாட்டையும் பெற்றோரையும் பார்க்கும் ஆர்வத்தில் இலங்கைக்கு செல்ல உள்ளேன். இளைஞர்கள் பலரும் சைக்கிளில் பயணத்தை மேற்கொண்டு, மக்களோடு பழகி உலக கலாச்சாரத்தை தெரிந்து கொள்ள வேண்டும் என்பதே எனது விருப்பம் என்று தெரிவித்தார்.



# டெல்டா மாவட்டங்களில் கொள்முதல் பணியில் தொய்வு: நெல்லை விற்க முடியாமல் விவசாயிகள் வேதனை

தஞ்சாவூர், அக்.20-

தஞ்சாவூர் உள்ளிட்ட டெல்டா மாவட்டங்களில் 6 லட்சம் ஏக்கரில் குறுவை சாகுபடி மேற்கொள்ளப்பட்டு, 80 சதவீதம் அறுவடைப் பணிகள் நிறைவடைந்துள்ளன. எஞ்சியுள்ள வயல்களில் பெரும்பாலான இடங்களில் மழைநீர் தேங்கியுள்ளதால், அறுவடைப் பணிகள் பாதிக்கப்பட்டுள்ளன.

கொள்முதல் நிலையங்களில் சாக்குகள் பற்றாக்குறை, ஏற்கெனவே கொள்முதல் செய்யப்பட்ட நெல்லை சேமிப்புக் கிடங்களுக்கு அனுப்பாதது போன்றவற்றால் தற்போது கூடுதலாக நெல்லைக் கொள்முதல் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

மேலும், மழைநீரில் நனைந்து நெல்லில் ஈரப்பதம் அளவு அதிகரித்துள்ளது. இதுபோன்ற காரணங்களால், கொள்முதல் நிலைய வளாகங்களிலும், அவற்றின் அருகேயுள்ள சாலைகளிலும் நெல்லைக் கொட்டிவைத்து விவசாயிகள் வாரக்கணக்கில் காத்திருக்கின்றனர். இவ்வாறு பல்வேறு கொள்முதல் நிலையங்களிலும் ஆயிரக்கணக்கான நெல் மூட்டைகள் தேங்கியுள்ளன. இதனால், நெல்லை விற்று தீபாவளி பண்டிகையைக் கொண்டாட திட்டமிட்டிருந்த விவசாயிகள் பெருத்த ஏமாற்றம் அடைந்துள்ளனர். மேலும், வழக்கமான உற்சாகத்துடன் தீபாவளியைக் கொண்டாட முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

குறிப்பாக, காட்டூர், கண்டிதம்பட்டு உள்ளிட்ட கொள்முதல் நிலையங்களில் 12 நாட்களுக்கு மேலாக நெல் மூட்டைகளுடன் காத்திருப்பதாக விவசாயிகள் வேதனை தெரிவித்தனர். இதுகுறித்து அவர்கள் கூறும்போது, "12 நாட்களாக காத்திருந்தும் நெல் கொள்முதல் செய்யப்படவில்லை. இதனால், கடன் வாங்கி தீபாவளியைக் கொண்டாட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, கொள்முதல் நிலையங்களில் நெல்லை விற்க காத்திருக்கும் விவசாயிகளுக்கு இந்த தீபாவளி கசப்பாக மாறிஉள்ளது" என்றனர்.

# தமிழக பாஜகவில் 234 தொகுதிக்கும் தேர்தல் பொறுப்பாளர்கள் நியமனம்



**சென்னை, அக்.20–**

தமிழகத்தில் அடுத்த ஆண்டு நடைபெற உள்ள சட்டப்பேரவை தேர்தலை எதிர்கொள்ள தமிழக பாஜக தீவிர களப்பணியாற்றி வருகிறது. இதுதொடர்பாக, அனைத்து மாவட்ட நிர்வாகிகளுடன் ஆலோசனை நடத்தி பல்வேறு அறிவுறுத்தல்களை மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் வழங்கியுள்ளார். மேலும், மாநில நிர்வாகிகளுடனும் அவ்வபோது ஆலோசனை மேற்கொண்டு வருகிறார்.

இந்நிலையில், சட்டப்பேரவை தேர்தலையொட்டி, தமிழகம் முழுவதும் 'தமிழகம் தலை நிமிர தமிழனின் பயணம்' என்ற முழக்கத்துடன் நயினார் நாகேந்திரன் யாத்திரை மேற்கொண்டுள்ளார். தற்போதுவரை மதுரை, சிவங்கை, செங்கல்பட்டு வடக்கு, வட சென்னை, மத்திய சென்னை உள்ளிட்ட பகுதிகளில் யாத்திரையை நிறைவு செய்துள்ளார். தொடர்ந்து, 24ம் தேதி முதல் பெரம்பூரில் இருந்து மீண்டும் யாத்திரையை தொடங்க இருக்கிறார். இந்நிலையில், தமிழகம் முழுவதும் 234 தொகுதிகளுக்கும் மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் தேர்தல் பொறுப்பாளர்களை நியமித்திருக்கிறார்.

அந்தவகையில், மயிலாப்பூர் தொகுதிக்கு மாநில துணை தலைவர் கரு.நாகராஜன், ஆலந்தூர் தொகுதிக்கு நாராயணன் திருப்பதி, வேளச்சேரிக்கு அமர்பிரசாத் ரெட்டி, சேப்பாக்கத்துக்கு நதியா சீனிவாசன், விளவங்கோடு தொகுதிக்கு விஜயதரணி, மதுரை தெற்கு பேராசிரியர் ராம சீனிவாசன், பட்டுக்கோட்டை கருப்பு முருகானந்தம், பண்ருட்டி அஸ்வத்தாமன், திருக்கோயிலூர் ஏ.ஜி.சம்பத், தாம்பரம் கே.டி.ராகவன், திருச்செங்கோடு கே.பி.ராமலிங்கம் உள்பட234 தொகுதிகளுக்கும் பொறுப்பாளார்கள், அமைப்பாளர்கள், இணை அமைப்பாளர்களை நியமித்து நயினார் நாகேந்திரன் உத்தரவிட்டுள்ளார்.

# சட்டப்பேரவைத் தலைவர் மரபுகளை மதிக்க வேண்டும்: அன்புமணி வலியுறுத்தல்



சென்னை, அக்.20-

தமிழக சட்டப்பேரவை மரபுகளை பேரவைத் தலைவர் மதிக்க வேண்டும் என்று பாமக தலைவர் அன்புமணி தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக நேற்று அவர் வெளியிட்ட அறிக்கை: பாமகவுக்கு எதிரான செயல்களில் ஈடுபட்டதற்காக சேலம் மேற்கு எம்எல்ஏ இரா.அருள் கட்சியிலிருந்து நீக்கப்பட்டு, அவருக்குப் பதிலாக புதிய கொறடாவாக மயிலம் எம்எல்ஏ தேர்ந்தெடுக்கப்பட்டு 108 நாட்கள் ஆகின்றன. அதேபோல், பேரவைக் குழுத் தலைவராக ஜி.கே.மணி நீக்கப்பட்டு, அவருக்குப் பதிலாக தருமபுரி எம்எல்ஏ எஸ்.பி.வெங்கடேஸ்வரன், துணைத் தலைவராக மேட்டூர் எம்எல்ஏ சதாசிவம் ஆகியோர் கடந்த செப்.24ம் நாள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இதற்கான எனது கடிதங்கள் பேரவைத் தலைவரிடம் கொடுக்கப்பட்டுவிட்டன. ஆனால், பாமகவின் சட்டப்பேரவை குழுவுக்கு முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகிகளை அங்கீகரிக்க பேரவைத் தலைவர் அப்பாவு தொடர்ந்து மறுத்து வருகிறார். நடுநிலை தவறாமல் செயல்பட வேண்டிய பொறுப்பில் இருக்கும் ஒருவர், அரசியல் காரணங்களுக்காக அறம் மற்றும் மரபுகளை மதிக்காமல் செயல்படுவது நியாயமல்ல. பேரவைத் தலைவரின் செயல்பாடு கண்டிக்கத்தக்கது. இனியாவது பேரவைத் தலைவர் அறத்துக்குப் பணிந்து நீதியை மதிக்க வேண்டும். அந்த வழியில் பாமகவின் சட்டப்பேரவை குழுத் தலைவராக எஸ்.பி.வெங்கடேஸ்வரன், துணைத் தலைவராக சதாசிவம், கொறடாவாக சி.சிவக்குமார் ஆகியோரை அங்கீகரிக்க வேண்டும்.இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161